IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.2, SRIVILLIPUTTUR
Crl.M.P NO.70/2024

| | |
|---|---|
| Name | திரு. சஞ்சீவிராஜ் கிராமநிர்வாக அலுவலர் |
| Father's name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 11th day of March 2024.

Signature of Witness.

11.03.2024.

நான் இராஜபாளையம் தாலுகா ரெகுநாதபுரத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். ஜூலை 2021 முதல் நான் மேற்படி கிராமத்தில் பணிபுரிந்து வருகிறேன். ரெகுநாதபுரம் பட்டா எண்.609 ல் உள்ள சர்வே எண்கள் எனது கிராமத்திற்கு உட்பட்டதென்றால் சரிதான். அந்த பட்டாவில் சர்வே எண். 19/1 ஏ 1 ஏ உள்ளடக்கம் என்றால் சரிதான். அதன் விஸ்திரனம் 0.99.64 ஹெக்டர் ஆகும். 0.99.64 ஹெக்டர் என்பது 2 ஏக்கர் 46 சென்ட் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பட்டா எண்.609 இராதாகிருஷ்ணன் என்பவர் பெயரில் உள்ளது. ரெகுநாதபுரத்தில் பட்டா எண்.1049 ற்குரிய நிலங்களும் எங்கள் கிராமத்திற்கு உட்பட்டதென்றால் சரிதான். அதில் கண்ட சர்வே எண். 19/ 1 பி விஸ்திரணம் 0.38.0 ஹெக்டேர். அது 95 சென்ட் என்றால் சரிதான். 19/1பி யும், 19/1ஏ 1ஏ யும், 19/1 ல் உள்ளடங்கியது என்றால் சரிதான். 19/1 பி கோவிந்தன் என்பவரின் வாரிசுகளால் அனுபவம் செய்து வரப்பெறுகிறது

என்றால் சரிதான். 19/1 ஏ 1 ஏ இராதாகிருஷ்ணன் என்பவரால் அனுபவம் செய்து வரப்பெறுகின்றது என்றால் சரிதான். இந்த உட்பிரிவுகள் 2014 ம் ஆண்டு செய்யப்பட்டதென்றால் சரிதான். 2021 ம் ஆண்டில் 1 ஏக்கர் 21 சென்டிற்கு பட்டா மாற்றம் செய்து தரக்கோரி கோவிந்தனின் வாரிசுகள் என்னை அனுகினார்கள் என்றால் பட்டா மாற்றுவதற்காக வந்தார்கள், ஆனால் வருடம் சரியாக தெரியவில்லை. ஆனால் பத்திர தொடர்பு இல்லை என்று பட்டா மாற்றம் செய்யவில்லை.